உறவை வளர்ப்போம்
உணர்வை காப்போம்

# மாதாந்திர செய்தி மடல்

## செப்டம்பர் – 2019



# தமிழ்நாடு ரெட்டி நலச் சங்கம்

மாநில தலைவராக **திரு. G.R ரெட்டி**

## மீண்டும் தேர்வு !!

## மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சிறப்பு கூட்டம்

கடந்த 26/09/2019 அன்று திருச்சி பொன்னகர் குரு இன்னில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் கோவை மண்டலத் தலைவர் திரு. MC. பழனிச்சாமி அவர்கள் அனைவரையும் வரவேற்று கூட்டத்தை தொடங்கி வைக்க, கௌரவத்தலைவர் திரு. M. வெங்கடசுப்பு அவர்கள் தலைவர் திரு. G.R. **ரெட்டி** அவர்களை அனைவரின் பலத்த கரகோஷ வரவேற்புடன் மேடைக்கு அழைத்து, அன்றைய நிகழ்வுகளை குறித்து விரிவாக கூறி மேடையை தலைவர் வசம் ஒப்படைத்தார். தலைவராக மதிப்பிற்குரிய திரு. G.R. **ரெட்டி** அவர்கள் மீண்டும் அனைவராலும் ஒருமித்த கருத்தோடு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தலைவரின் ஒப்புதல்படி மாநில பொதுச்செயலாளராகக் கோவை ஸ்டார் ஜெராக்ஸ் K. ஜனகராஜன் அவர்களும் மாநில பொருளாளராக திருச்சி அஜந்தா கண்ணன் (எ) A. வேணுகோபால் அவர்களும் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

அனைத்து மாவட்டங்களில் இருந்தும் நிர்வாகிகள் கலந்துகொண்டார்கள், கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ஆக்க பூர்வ பணிகளை மிக வேகமாக துவங்க ஆலோசனைகள் பெறப்பட்டன.

Bylaw திருத்தி அமைப்பது, அனைத்து மாவட்டங்களிலும் பொறுப்பாளர்கள் நியமிப்பது, ஜாதி சான்றிதழ் பெறுவதில் உள்ள சிக்கல்களை களைவது உள்ளிட்ட பல விபரங்கள் முன்மொழியபட்டன. தலைவர், கௌரவ தலைவர், கௌரவ ஆலோசகர் உள்ளிட்ட அனைவரும் இதனை மிக உன்னிப்பாக கவனித்து உள்வாங்கி கொண்டார்கள்.

தலைவர் உரையில், திருச்சியில் நமது சங்க தலைமை அலுவலகம் அமைப்பது, சங்கத்திற்கு நியாயமான முறையிலே பொருளாதார வரவை ஏற்படுத்துவது போன்ற காரியங்களை புதிய மாநில பொருளாளர் திருச்சி அஜந்தா கண்ணன் அவர்களின் மூலமாக செய்துவிட முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்கள்.

தலைவர் மேலும் தனது உரையில் தாம் தலைவராக பொறுப்பேற்ற பிறகு நடத்திய முதல் மாநாட்டில் இருந்து பல்வேறு நிகழ்வுகளுக்கும் எந்த எதிர்ப்பார்ப்புகளும் இன்றி பொருளையும் உழைப்பையும் தந்தவர் புதிய மாநில பொதுச்செயலாளர் என்றும் அவர் இன்னும் பல செயல்கள் செய்ய வல்லவர் என்றும், புதிய நிர்வாகிகள் மூலம் சங்கம் உயர்நிலை அடைய வாய்ப்பு உள்ளது என்றும் குறிப்பிட்டு எடுத்து சொன்னார்கள்.



மாநில பொதுச்செயலாளர்



மாநில பொருளாளர்



கௌரவத் தலைவர்



திரு. M.C. பழனிச்சாமி, கோவை மண்டலம்

மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், பொதுச் செயலாளர் மற்றும் பொருளாளர் தேர்வினை பலத்து கர கோஷத்துடன் ஏற்று கொண்டு அவர்களை வாழ்த்தி உரையாற்றினார்கள்.

புதிய பொதுச்செயலாளர் திரு. K. ஜனகராஜன் தனது ஏற்புரையில் அனைவருக்கும் நன்றி தெரிவித்து சங்கத்தின் தற்போதைய நிலை குறித்தும், இதன் கட்டமைப்பை மிக சரியாக பலபடுத்துவது குறித்தும் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று இதற்கான பூர்வாங்க பணியினை துவக்குவது குறித்தும் மிக விரிவாக எடுத்துரைத்தார்கள். சிறப்பான செயல்பாட்டுக்கு உறுதி அளித்தார்கள். மாநிலம் முழுவதும் சென்சஸ் எடுப்பது மற்றும் ஒரு பலமான திருமண தகவல் மையம் ஏற்படுத்துவது குறித்தும் தெளிவுடன் திட்டங்களை பகிர்ந்தார். அதன் அவசியங்கள் குறித்தும் விளக்கினார்.

நம்முடைய மாநிலம் முழுவதும் பரவியிருக்கிற அனைத்து ரெட்டி பெருமக்களின் சென்சஸ் பணிகளை ஆன்லைன் மூலமாக சேகரிப்பதற்கு ஒரு தனி மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் பொறுப்பாளர்கள் நியமித்தபின்பு சென்சஸ் எடுக்கிற பணி ஆன்லைன் மற்றும் ஃபார்ம் மூலமாகவும் 6 மாதகாலத்திற்குள் முழுமையாக சேகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு அதற்கான பணி துவக்கப்பட்டுவிட்டது என்பதையும் தெரியப்படுத்தினார்கள்.

புதிய பொருளாளர் பேசுகிற போது தேர்வுக்கு நன்றி தெரிவித்தும், தலைவர் ஏதோ ஒரு எதிர்ப்பார்ப்போடுதான் இந்த பணிக்கு தன்னை தேர்வு செய்திருக்கிறார் என்றும் தற்போது எந்த பொருளாதாரமும் இல்லாத இந்த அமைப்புக்கு எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக சங்க அலுவலகம் ஒன்றை திருச்சியிலே துவங்க தேவையான பணிகளை உடன் செய்வதாக உறுதிமொழி தந்தார்கள் நிர்வாகிகள் அனைவரும் பெரிதும் மகிழ்ந்து கரகோஷத்துடன் வாழ்த்து தெரிவித்தனர்.

கௌரவத் தலைவர் திரு. M. வெங்கடசுப்பு அவர்கள் பேசுகிற பொழுது ஜாதி சான்றிதழ் பிரச்சனைகளுக்காக மாவட்ட ஆட்சி தலைவரிடம் அழுத்தம் கொடுத்தது பற்றியும் புதிய பொறுப்பாளர்கள் நியமனத்திற்கு பின்பு ஓமந்தூரார் சிலை திறப்புக்கு அரசிடம் அழுத்தம் தரவேண்டியது பற்றியும் விரிவாக எடுத்துச் சொன்னார்கள்.

பெரம்பலூர் திரு. N. தேவராஜன் ரெட்டியார் தனது உரையின் போது புதிய நிர்வாகிகளின் தேவை மற்றும் சிறப்புகளை கூறி நல்ல மாற்றத்திற்கான எதிர்பார்ப்புகளை தெரிவித்து பெரம்பலூர் மாவட்டத்தின் ஆதரவினை கூறி அமர்ந்தார்கள்.



திரு. N. தேவராஜன், திருச்சி மண்டலம்



கௌரவ ஆலோசகர்

கோவை மண்டலத் தலைவர் திரு. M.C. பழனிச்சாமி அவர்கள் புதிய நிர்வாகிகளை வாழ்த்தி பேசுகிற போது அவர்களுக்கு பொறுப்புகள் நிரம்ப இருப்பதையும், மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அந்தந்த மாவட்ட நிர்வாக அமைப்பின் மூலம் உறுப்பினர்கள் சேர்க்கை உள்ளிட்ட பல தேவைகளையும் செய்ய வேண்டிய கட்டாயத்தினையும் விரிவாக எடுத்துச் சொன்னார்கள்.

ஈரோடு மாவட்ட தலைவர் திரு. K. சாரங்கபானி அவர்கள் தலைவரின் தேர்வு மற்று புதிய நிர்வாகிகளின் தேர்வும் குறித்து மகிழ்வு தெரிவித்து ஜாதி சான்றிதழ் பெறுவதில் மிகவும் கவனம் தேவை என்றும் இதில் இருக்கிற குறைகள் குறித்தும் மிக விரிவாக சொன்னார்கள். அவர்கள் மாவட்டத்திற்கு இன்னும் அதிகமான ஒத்துழைப்பு மாநில சங்கத்தில் இருந்து தேவை என்பதை எடுத்து சொன்னார்கள்.

விழுப்புரம் மாவட்டம் திரு. L. துளசிதர் ரெட்டி அவர்கள் பேசுகிறபோது புதிய நிர்வாகிகளை வாழ்த்தியும் அவர்களால் சங்கம் புதிய வடிவம் பெறும் என்றும் சங்க பதிவு புதுப்பித்தல் போன்ற நிர்வாக சிக்கல்கள் எது இருந்தாலும் தான் முன்னின்று செய்து தருவதாக தலைவர்களிடம் உறுதி தந்து வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

வேலூர் திரு. C. கோகுல் தாஸ் அவர்கள் புதிய நிர்வாகிகளை வாழ்த்தி, Bylaw திருத்தங்கள் உள்ளிட்ட சில எதிர்பார்ப்புகளை தெரிவித்து புதிய நிர்வாகிகள் புதிய உத்வேகத்துடன் செயல்படுவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்கள்.

காஞ்சிபுரம் மற்றும் செங்கை மாவட்ட தலைவர் திரு. D. விவேகானந்தர் ரெட்டி சங்கம் மேலும் வளர்ச்சி பெற புதிய நிர்வாகிகளின் பணிகளுக்கு தங்கள் மாவட்டங்கள் சார்பாக அனைத்து ஒத்துழைப்பையும் தருவதாக கூறி வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

திருவண்ணாமலை திரு. S.D. தனுக்கோட்டி ரெட்டி பேசுகிற பொழுது ஜாதி சான்றிதழ் பெறுவதில் இருக்கிற சிக்கல்கள் குறித்து விளக்கி அதற்காக தான் சேகரித்து வைத்திருக்கிற தகவல்கள் அடங்கிய கோப்பு ஒன்றை புதிய செயலாளரிடம் தந்துவிட்டு சென்றார்கள்.



காஞ்சி/செங்கை மாவட்டத் தலைவர்



வேலூர் மாவட்டத் தலைவர்

மதுரை மாவட்ட தலைவர் திரு. கௌரி V. முத்துகிருஷ்ணன் ரெட்டியார் புதிய நிர்வாகிகளை வாழ்த்திவிட்டு அரசு வேலை என்று அலைய வேண்டாம் சுயதொழில் துவங்குங்கள். வேலை வாய்ப்பு ஏதாவது தேவைப்பட்டால் தன்னை அணுகி ஆலோசனை பெறுங்கள் என்றும் தெரிவித்தார்கள். தனது கௌரி உணவகத்திற்கு 27 கிளைகள் இருப்பதாகவும் 1800 பேர்கள் தங்கள் நிறுவனத்தில் பணிபுரிவதாகவும் கூறி சுயதொழில் செய்கிற எண்ணத்திற்கு புதிய ஊக்கம் கொடுத்து பேசினார்கள் .

மத்திய சென்னையிலிருந்து திரு. S. வேல்முருகன் ரெட்டி, வடசென்னையிலிருந்து திரு. S. பாலமுருகன் ரெட்டி, தென்சென்னையிலிருந்து திரு. G. பாலகுரு ரெட்டி ஆகியோர்களும் புதிய நிர்வாகிகளை வாழ்த்தி நமது சமுதாய நலனுக்கு தற்போதைய சூழல் ஒரு புதிய மாற்றத்தினை ஏற்படுத்தி தரும் என்று நம்புவதாகவும். சங்கம் மேலும் வளர்ச்சி பெற வாழ்த்தியும் மகிழ்ந்தார்கள்.

தூத்துக்குடி செயலாளர் திரு. S. பெத்துராஜ் அவர்கள் பேசுகிற பொழுது ஜாதி சான்றிதழ் பெறுவதற்கு சில போராட்டங்கள் துணிவாக முன்னின்று நடத்தி நமது சமூகத்திற்கு பெற்றதாகவும், போராடாமல் எளிதாக எதுவும் கிடைக்காது என்றும் பலத்த கைதட்டல்களுக்கு இடையே தெரிவித்தார். மாநில புதிய நிர்வாகிகளை பாராட்டி ஆதரவு தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து தலைவர் திரு. N. கண்ணன் அவர்கள் புதிய நிர்வாகிகள் தேர்வை பெரிதும் பாராட்டி கோவை மண்டலத்திலும், காஞ்சி மற்றும் செங்கை மாவட்டத்திலும் இருந்து கஜா புயல் நிவாரணத்திற்கு பட்டுகோட்டை, முத்துப்பேட்டை ஆகிய இடங்களுக்கு வந்திருந்து உதவியதை சுட்டிக்காட்டி மகிழ்ந்தார்.

சென்னை உட்லேண்ட்ஸ் திரு. P. ரவி அவர்கள் பேசுகிற போது ஜாதி சான்றிதழ் பெறுவதற்காக மாவட்ட ஆட்சி தலைவர் வரையிலும் சென்று எடுத்த முயற்சிகளையும் ஓமந்தூரார் படத்திறப்பு சட்ட மன்றத்தில் திறக்க கடிதம் கொடுத்ததையும் சுட்டி காட்டினார்.

நமது கௌரவ ஆலோசகர் திரு. P. நீல்ராஜ் அவர்கள் பேசுகிற போது தாம் பல ரெட்டியார் சங்க கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தாலும் இது போன்ற அனைத்து மாவட்ட நிர்வாகிகளும் தங்கள் கருத்தினை ஆக்கப்பூர்வமான முறையிலே பகிர்ந்து கொண்டதை இப்போது தான் பார்க்கிறேன், உண்மையிலேயே நிறைவாக இருக்கிறது என்று கூறி புதிய நிர்வாகிகளுக்கு தனது வாழ்த்துக்களை மகிழ்ந்து தெரிவித்தார்கள்.



விழுப்புரம் மாவட்ட பொதுச்செயலாளர்



தூத்துக்குடி மாவட்ட செயலாளர்

## சிறப்புச்செய்தி

மாநில சிறப்புக் கூட்டத்திற்கு பின்பு 5.10.2019 அன்று தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் சந்திப்பில் திருச்சியில் நமது தலைமை அலுவலகம் திறப்பது குறித்து விவாதிக்கப்பட்டு உடனடியாக அதற்கான இடத்தை தலைவர் அவர்கள் நேரடியாக காண்பித்து, அலுவலக அமைப்புப்பணி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விரைவில் புதிய அலுவலகம் திறக்கப்படும்

## தகவல் தொடர்புக்கு :

Er. **K.** **ஜனகராஜன்**
(Star Xeroxs, Coimbatore)
மாநில பொதுச்செயலாளர்
**99449 34903**

**அஜந்தா கண்ணன்**
**(எ) A.வேணுகோபால்**
மாநில பொருளாளர்
**98 42 42 42 42**




















